

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 03.07.2025 | 27. ஓர் ஒழுங்கான ‘தியான ஜீவியத்தில்’ பெற்றிடும் உள்ளான விடுதலை! |
|---|---|



**17**-ம் நூற்றாண்டில் வாழ்ந்த *மேடம் குயான்* அம்மையாரின் வாழ்க்கை, சீரிய ஒழுங்கின் பக்தியான ஜீவியத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவர்கள் பெற்றிருந்த ஆணித்தரமான ஒழுங்கான தியான வாழ்வின் பண்பு, அவர்கள் பல ஆண்டுகள் பிரெஞ்சு தேசத்தில் ஓர் கடுமையான சிறைவாசம் அடைந்தபோதும், அவ்வித கொடிய சூழ்நிலைகளுக்கு மேலாக தன் ஆவியில் எழுச்சியடைந்து கீழ்கண்டவாறு எழுதினார்கள்:

“சிறைக்கூண்டு என்னை வளைத்துப் பிடித்துக் கொண்டது; வெளியே பறந்திட என்னால் முடியாது! என் செட்டைகள் கட்டப்பட்டிருந்தாலும் என் இருதயமோ பூரண விடுதலை பெற்றிருக்கிறது! பூரண சுதந்திரத்துடன் பறக்கும் என் ஆத்துமாவின் விடுதலையை, என்னைச் சூழ்ந்திருக்கும் சிறைக் கதவுகள் என்ன செய்திட முடியும்?” என்று எழுதினார்கள்.

பார்த்தீர்களா, ஓர் ஒழுங்கான தியான ஜீவியத்தில்தான் எவ்வளவு வல்லமை அடங்கியிருக்கிறது!

– ரத்னம்